# THE TAMIL CATHOLIC ASSOCIATION, VICTORIA

P.O.BOX 481, ROSANNA, VICTORIA 3084, AUSTRALIA

A.B.N. 57 010 334 854 APPROVED CHARITABLE ORGANISATION VCGLR 58755

Email – tcavinfo@gmail.com SMS only - 0468 771 015

CELEBRATING 25 YEARS TCAV

## சந்திப்பு... In touch...

## தலைவரின் சந்திப்பு

கிறீஸ்துவில் நிலைத்திருக்கும் அன்பின் சகோதர சகோதரிகளுக்கு,
புதிய ஆண்டில் இந்த தவக்கால-உயிர்ப்பு ஞாயிறு செய்தி மடலூடாக மீண்டும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

நத்தார் மற்றும் புதிய ஆண்டு காலத்தில் நம்மிலே சிலர் ஒரு உதவியையோ அல்லது பொருளையோ மறறவருக்கு ***கொடுப்பதிலே*** இன்பம் காணுவோம். இன்னும் பலர் இவைகளை ***பெறுவதிலே*** பெருமகிழ்ச்சி அடைவோம். நாம் மற்றவருக்கு கொடுப்பதுதான் இறைவனுக்கு மிகப்பிடித்தது என்று கூட வாதிப்போம். ஆனால் இந்த தவக்காலம் நாம் கொடுப்பதையோ அல்லது பெறுவதையோ முன்னிலை படுத்துவதில்லை, மாறாக எம்மை நாமே ஏறெடுத்துப்பார்க்க அழைக்கிறது!.

தவக்காலம் என்றால் "கிறீஸ்துவின் பாடுகள்-மரணம்-உயிர்பு" ஆகிய தருணங்கள் என முற்றுப்புள்ளி வைப்பதை விடுத்து இந்த தருணங்களை நினைவில் கொண்டு, இதிலே நான் எங்கு எப்படி இறைவனோடு இன்னும் மேலதிகமாக இணைந்து கொள்கிறேன் என்பதை நினைத்துப் பார்ப்போம்.

### ஆம்!.. தவக்காலம் ஒரு "இறை(ர)ற மீட்கும் காலம் !!!..."

நான் முன்பு கூறியது போல, இந்த சந்திப்பு பக்கம் எனக்கு மட்டும்தானா? இதோ இந்த இதழில் எனது சக நிர்வாகக் குழு உறுப்பினர்களை சந்தித்துப் பாருங்கள்.

உங்கள் அனைவருக்கும் எனது "கிறீஸ்து உயிர்ப்பு விழா வாழ்த்துக்கள் உரித்தாகுக"
மீண்டும் சந்திக்கும் வரை.....
**எலாடியஸ் பர்னாந்து (தலைவர்)**

## உப காரியதரிசியின் சந்திப்பு....

அன்பின் கத்தோலிக்க நண்பர்களுக்கு எனது தமிழ் வணக்கங்கள்,

ஆயிரம் வேலைகள், கடமைகள்.. ஆனாலும் எமது சங்கத்தில் உறுப்பினராக மட்டும் இருந்து விடாமல் ஒரு நிர்வாக சபை ஊழியானாக சேவை செய்வதில் மனதுக்கு ஒரு திருப்திதான். அது ஏன்?

***பொருளும்-திரவியமும் தேடி என் இந்திய மண்ணை தொலைத்து விட்டு இங்கு வந்து வசதியோடு வாழும் நான் (என் குடும்பம), நாளை என் பிள்ளைகள் "தமிழ் - சமூகம்-காலாச்சாரம்" என பிணைந்த ஒரு பொக்கிஷ உணர்வையும் அடையாளத்தையும் தொலைத்து விடக்கூடாது என்று ஆதங்கப்படுகிறேன். ஏனென்றால், அப்படி தொலைக்கும் பட்ஷத்தில் அதைத்தேடிக் கொடுக்க இங்கு அவர்களுக்கு யார்தான் இருப்பார்கள்?***

அந்த வகையில் எனது கத்தோழிக்க சங்கம், மத-மொழி பற்றை தக்க வைத்துக் கொள்ள உறுதுனையாக இருக்கும், தமிழிலே திருப்பலியும்-தியானங்களும் தரும் என நம்புகின்றேன்.. இந்த உணர்வுள்ள ஒவ்வொரு பெரியவர்களும் எமது சங்கத்தின் நிர்வாகத்தில் கூட இனைந்து கொள்ளலாமே?

உயிர்த்த ஞாயிறு பெருவிழா வாழ்த்ததுக்கள்.
நன்றி.
**கொட்வின் சேவியர் (உப செயளாளர்)**

## உப பொருளாளரின் சந்திப்பு....

அன்பான TCAV நண்பர்களுக்கு என் வணக்கங்கள்,

ஏறக்குறைய 12-14 ஆண்டுகளாக இந்த சங்கத்தில் வெவ்வேறு பொறுப்புகளில் கைகோர்த்து நிற்கின்றேன். தேசம் தான் மாறிவிட்டது, தமிழ் வாசம் சோடை போகவில்லை! நேரம் கிடைப்பதில்லை.. தலைக்கு மேல் வேலை இருக்கிறது..., கூட்டங்களுக்கு வர வசதிப்படுவதில்லை..... இவையெல்லாம் எனக்கும் அடிக்கடி வரும் சபலங்கள் தான்.

ஆனால் எனக்கும் ஒரு தார்மீகப்பணி இருக்கிறதே!

ஆரம்பத்தில் மிகப்பெரிய சங்கமாக இருந்த நாம் இப்போது சற்று குறுகி விட்டோம், ஆனால் கூன் வளையவில்லை. காரணம் உங்களை போன்ற சில நல்ல உள்ளங்களின் ஒத்துழைப்பு ஒன்றேதான்.

***மறைசார்ந்த மற்றும் பொழுது போக்கு இனைந்த ஒரு சூழலுக்கு நாம் படிப்படியாக சென்றால் மட்டுமே, இனிவரும் காலங்களில் எமது இளசுகளுக்கு இந்த சங்கத்தை எடுத்துச் செல்லலாம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்!***

அதற்கு புதிய சிந்தனையும்-புதிய முகங்களும் வேண்டும். காத்து நிற்கிறோம்! வந்து இணையுங்கள் !!
நன்றியுடன்.
**மனோராஜ் இசிதோர் (உப பொருளாளர்)**